Koviloor Digital Library

14095


உ

சிவமயம்

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த

தேவாரம்

அற்புத பதிகங்கள்





Acc. 14095

குருவருள் திருமுறை மன்றம்

ஸ்ரீவில்லிபுத்தூர்.

பன்னிரு திருமுறை பதிக விளக்க

ஓராண்டு நிறைவு விழா வெளியீடு

30-01-2011 ஞாயிற்றுக்கிழமை

Koviloor Digital Library

உ
சிவமயம்

பன்னிரு திருமுறை பதிக விளக்க ஆரம்ப விழா

நாள் : **31–01–2010** ஞாயிறு காலை 10.00 மணி
இடம் : அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், மடவார் வளாகம்

தேவாரம் என்னும் சொல் இறைவன் மீது அன்பு (தே- தேவன், வாரம் - அன்பு) உண்டாகும்படி செய்வது என்றும் (தே + ஆரம் – தே - இறைவன், ஆரம் - மாலை) இறைவனுக்கு என்றும் வாடாத பாமாலையாகச் சூட்டப்பட்டுள்ளது என்றும் இருபொருள்படும்.

ஞானசம்பந்தப் பெருமான் சைவ சமயக் குரவர் வரிசையில் முதலாவதாகப் போற்றப்படும் அருளாளர். மூன்றாண்டுக் குழந்தையாக இருந்தபோது சீர்காழிப் பதியில் கோவில் குளக்கரையில் நின்ற ஞானசம்பந்தப் பிள்ளை நீரில் மூழ்கிய தந்தையைக் காணாது அம்மே, அப்பா என்று அழுது அரற்றினார். அப்போது இறைவன் கட்டளையிட பார்வதி தேவி பொற் கிண்ணத்தில் பாலமுது ஊட்டினார். அதனால் அளவில்லா ஞானம் பெற்று தெய்வக் குழந்தை ஆனார். நீரிலிருந்து வெளிவந்து யார் கொடுத்த பாலை உட்கொண்டாய் என்று தந்தை அதட்டியபோது, தனக்கு பாலமுது அளித்தது, வானத்தில் ரிஷப வாகனத்தில் காட்சி அளித்த இறைவனையும், இறைவியையும் சுட்டிக் காட்டி அருளிச் செய்த பதிகம் ''தோடுடைய'' என்று தொடங்கு பதிகமாகும் இது.

முதல் திருமுறை பதிகம் 1

தலம் : திருபிரமபுரம், இறைவன் : பிரம்மபுரிஸ்வரர்
இறைவி: திருநிலைநாயகி பண் : நட்டபாடை

தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே! 1

முற்றல் ஆமை இள நாகமொடு ஏனமுளைக்கொம்பு அவைபூண்டு
வற்றல்ஓடு கலனாப் பலிதேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுது ஏத்த
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 2

நீர் பரந்த நிமிர் புன்சடைமேல் ஓர் நிலா வெண்மதி சூடி
ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது என்னப்
பேர்பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 3

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி விளங்கு தலை ஓட்டில்
உள் மகிழ்ந்து பலி தேரிய வந்து எனது உள்ளம் கவர் கள்வன்

Koviloor Digital Library

மண் மகிழ்ந்த அரவம் மலர்கொன்றை மலிந்த வரை மார்பில்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 4

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடை ஊரும் இவன் என்ன
அருமை ஆக உரைசெய்ய அமர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது ஓர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 5

மறை கலந்த ஒலிபாடலொடு ஆடலர் ஆகி மழு ஏந்தி
இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
கறைகலந்த கடி ஆர் பொழில் நீடு உயர் சோலை கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 6

சடைமுயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர்வு எய்த
உடை முயங்கும் அரவோடு உழிதந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர்கானல் அம் பொன் அம் சிறகு அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 7

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை வீரம்விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி செற்று எனது உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகில் பலஊழிகள் தோன்றும் பொழுது எல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 8

தாள் நுதல் செய்து இறை காணிய மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது உள்ளம் கவர் கள்வன்
வாள்நுதல் செய் மகளீர் முதலாகிய வையத்தவர் ஏத்த
பேணுதல்செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 9

புத்தரோடு பொறி இல் சமணும் புறம் கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலி தேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மத்தயானை மறுக உரி போர்த்தது ஓர்மாயம் இது என்ன
பித்தர்போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 10

அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெரு நெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம்வைத்து உணர் ஞான சம்பந்தன் உரை செய்த
திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 11

பதிக இசை : திரு. **கொ. பூமிநாதன்,** M.A.,B.Ed., D.A.,*அவர்கள்*
செயலாளர், சேக்கிழார் மன்றம், இராஜபாளையம்

துவக்க உரை : *மனம் சேர* **சந்திரகாசன்,** M.A.,B.Ed., *அவர்கள் சேலம்*

பதிக விளக்கம் : *செந்தமிழ் அரசு திரு.* **K.சிவக்குமார்,** M.E., *அவர்கள் சென்னை*

விழாவினை ஏற்றுப்போற்றியோர் : **குருவருள் திருமுறை மன்றம்,**
மற்றும் சிவனடியார் திருக்கூட்டம், ஸ்ரீவி.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

2வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

இறைவன் திருக்கோலக்கா என்னும் தலத்தில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு பொன்னால் ஆன தாளம் வழங்கியருளினார். இறைவி. அப்பொற்றாளத்தில் ஓசை உண்டாகும்படி அருளினார். இங்கு அருளிச் செய்தது மடையில் வாளை எனத் தொடங்கம் பதிகமாகும்.

முதல் திருமுறை பதிகம் 23

தலம் : திருக் கோலக்கா பண்: தக்கராகம்
இறைவன் : சப்தபுரீஸ்வரர் இறைவி : ஓசைகொடுத்த நாயகி

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் கா வுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 1

பெண்டான் பாகமாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. 2

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 3

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப்படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. 4

மயிலார் சாயன் மாதொர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே 5

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்

Koviloor Digital Library

கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. 6

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கற் றுயர மில்லையே. 7

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. 8

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. 9

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளரும்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

நாள் : **21–02–2010** ஞாயிறு மாலை 6.30 மணி

இடம் : அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை

பதிக இசை : திரு. **ஆ. ராமச்சந்திரன்** அவர்கள் ஸ்ரீவி.

பதிக விளக்கம் : திரு. **மா. பட்டமுத்து,** M.Sc.,B.T., அவர்கள் சங்கரன்கோவில்

விழாவினை ஏற்றுப்போற்றியோர் : **அருள்மிகு வைத்தியநாத சுவாமி கோவில் அர்த்தசாம வழிபாட்டுக் குழுவினர்**

திருச்சிற்றம்பலம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILUR
A. No. 14095
Acc.No: 14095
A.23

Koviloor Digital Library

3வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

திருப்பாச்சிலாசிராமம் எனும் பதியில் சிற்றரசனான கொல்லி மழவன் மகளுக்கு தீராமல் இருந்த முயலகன் என்னும் வாத நோயை தீர்க்க அருளிச் செய்த பதிகம் இது.

முதல் திருமுறை பதிகம் 44

தலம் : திருப்பாச்சிலாசிராமம் பண்: தக்கராகம்
இறைவன் : மாற்றறிவரதர் சமிவனேஸ்வரர், பிரமபுரீஸ்வரர்
இறைவி : பாலசுந்தரி

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடை ஆடை கனல் சுடரால் இவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணி மார்பர் தம்மடிகள் இவர் என்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே. 2

வெஞ்சுடர் ஆடுவர் துஞ்சிருள் மாலை வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச் சிதை செய்வதோ இவர் சீரே. 3

கனமலர்க் கொன்றை அலங்கல்இலங்கக் கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்து அழகாய புநிதர் கொலாம் இவரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே. 4

மாந்தர் தம் பால் நறுநெய் மகிழ்ந்தாடி வளர்சடை மேல் புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர் வீணை முதிர ஓர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச் சதுர் செய்வதோ இவர் சார்வே. 5

நீறு மெய்பூசி நிறைசடை தாழ நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி
ஆறது சூடி ஆடர வாட்டியை விரற் கோவண ஆடை

Koviloor Digital Library

பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே. 6

பொங்கிள நாகமொர் ஏகவடத்தோடு ஆமை வெண்ணூல் புனை கொன்றை
கொங்கிள மாலை புனைந்தழகாய குழகர் கொலாமிவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச் சதிர் செய்வதோ இவர் சார்வே. 7

ஏவலத் தால் விசயற்கு அருள்செய்து இராவணன் தன்னை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழிற் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச் சிதை செய்வதோ இவர் சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியது இல்லை கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியது இல்லை என இவர் நின்றது மல்லால்
ஆலது மாமதி தோய் பொழிற் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப் பழிசெய்வதோ இவர் பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனும் நகுவர் அவர் இருபோதும்
ஊணொடு கூடிய வுட்கு நகையால் உரைகள் அவை கொள வேண்டா
ஆணொடு பெண் வடிவாயினர் பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
பூண் நெடு மார்பரோ பூங்கொடி வாடப் புனை செய்வதோ இவர் பொற்பே

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க ஆச்சிராமத்து உறைகின்ற
புகைமலி மாலை புனைந்து அழகாய புனிதர் கொலாமிவ ரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை ஏத்தச் சாரகிலா வினை தானே. 11

நாள் : **21–03–2010** *ஞாயிறு* *மாலை 6.30 மணி*

இடம் : *அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை*

பதிக இசை : திரு. **ஆ. ராமச்சந்திரன்** *அவர்கள் ஸ்ரீவி*

பதிக விளக்கம் : திருமதி. **மதி வேலாயுதம்,** M.A.,B.Ed., *அவர்கள்* தூத்துக்குடி

விழாவினை ஏற்றுப்போற்றியோர் : திரு.**வேல்ராஜ்,** B.B.A.,B.L., *அவர்கள்*
திருமதி. **V.செல்வசுசிலாராணி,** MA.,B.Ed.,M.Com., *அவர்கள்*
P.S.R. B.Ed. College

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

4வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

சம்பந்தப் பெருமான் தன்னுடன் வாதம் செய்யவந்த சமணரோடு அனல்வாதம் புனல் வாதம் செய்து வெற்றி பெற்று சைவ சமயத்தை நிலை நிறுத்தினார். அனல்வாதம் என்பது இறைவனைப் பற்றிய பாடல் அல்லது மந்திரம் எழுதிய ஓலையை நெருப்பில் இட்டால் வேகக் கூடாது. புனல்வாதம் என்பது அதே போன்று எழுதிய மற்றொரு ஓலையை வெள்ளோட்டம் உள்ள ஆற்றில் இட்டால் நீரில் மூழ்காது நீரோட்டத்தை எதிர்த்துச் செல்ல வேண்டும் என்பதாகும். அனல் வாதத்தின் போது அருளிச் செய்த பதிகம் இது.

முதல் திருமுறை பதிகம் 49

தலம் : திருநள்ளாறு பண்: பழந்தக்கராகம்
இறைவன் : தர்ப்பாரண்யேஸ்வரர்
இறைவி : போகமார்த்த பூண்முலையாள்

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்று அண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன் முறையால் ஆற்ற வெண்ணீறாடி அணியிழையோர்
பால்முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்கவல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தோண்டர் தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி ஊர்திபேணி ஏர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேல் ஓர் ஆடரவஞ் சூடி
நீறு தாங்கி நூல் கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

Koviloor Digital Library

திங்களுச்சி மேல்விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி எம் இறைவன் என்று அடியே இறைஞ்சத்
தங்களுக்சியால் வணங்கும் தன் அடியார்கட் கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர் தீ அங்கை ஏந்தி விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித் திகழ் தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலும் சிலைவரைத் தீ அம்பினால்
கட்டுமாட்டிச்சுண்ண வெண்ணீறு ஆடுவதன்றியும் போய்ப்
பட்டமார்ந்த சென்னி மேலோர் பால் மதியஞ் சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணலாகா நஞ்சு கண்டத்து உண்டு உடனே ஒடுக்கி
அண்ணலாகா வண்ண நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகா வுள் வினையென்று எள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசு மெய்யர் மண்டைத் தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய்யென்று எண்ணி அந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றை முடி மும்மதிளும் உடனே
நாசம் செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறேத்து பாடல் பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே. 11

நாள் : **18–04–2010** *ஞாயிறு* *மாலை 6.30 மணி*

இடம் : *அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை*

பதிக இசை : திரு. **ஆ. ராமச்சந்திரன்** *அவர்கள் ஸ்ரீவி.*

பதிக விளக்கம் : திரு. **கொ. பூமிநாதன்,** M.A.,B.Ed.,D.A., *அவர்கள்*
பொதுச்செயலாளர், சேக்கிழார் மன்றம், இராஜை.

விழாவினை ஏற்றுப்போற்றியோர் : திரு.**பொ. மறக்கண்ணு** B.A.,DGT.,
வள்ளலார் இல்லம் *அவர்கள்*
குட்டதட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

5வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

சம்பந்தப் பெருமான் திருவோத்தூரில் இறைவனை வேண்டி பதிகம் பாடி ஆண் பனை மரங்களை, பெண் பனை மரங்களாக மாற்றி, குலைகளைத் தரும்படி செய்தார்.

முதல் திருமுறை பதிகம் 54

தலம் : திருவோத்தூர் பண்: பழந்தக்கராகம்
இறைவன் : வேதபுரீஸ்வரர்
இறைவி : பாலகுசாம்பிகை, இளமுலை நாயகி

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர்மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 1

இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. 2

உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே 3

தோட்டி ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டி ரேயடி யார்வினை
ஓட்டி ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டி ரேயரு ணல்குமே. 4

குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயரு ணல்குமே 5

மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார்தம்மக்க ளீரென
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயரு ணல்குமே 6

Koviloor Digital Library

தாதார் கொன்னை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு ணல்குமே. 7

என்றா னிம்மலை யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே. 8

நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந் திசையெலாம்
ஒன்றா யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றி ரேயுமை நேடியே. 9

கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னோத்தூர்ச்
சீரவன்கழல் சேர்மினே. 10

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

நாள் : **16–05–2010** ஞாயிறு மாலை 6.30 மணி
இடம் : அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை
பதிக இசை : திரு. **இரா. சண்முகநாதன்,** B.A சங்கீதம் அவர்கள்
மதுரை.
பதிக விளக்கம் : திரு. **தா. குருசாமி தேசிகர்** அவர்கள்
தருமை ஆதீனப் புலவர், மதுரை.
விழாவினை ஏற்றுப்போற்றியோர் :
திரு.**S.வள்ளிநாயகம் பிள்ளை சன்ஸ்**
கோதா விலாஸ் ஆப்செட் பிரஸ் அவர்கள்
வடக்கு ரத வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

வேது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

சம்பந்தப் பெருமான் திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது இறைவன் அருளால் நாள் தோறும் பொற்காசு பெற்று அனைவருக்கும் உணவு அளித்து வந்தார். பொற்காசுகள் வாசி குறைந்ததாகவே கிடைக்கப்பெற்றது. பொற்காசுகளை வாசி நீங்கி அருள இறைவனை வேண்டி அருளிய பதிகம் இது.

முதல் திருமுறை பதிகம் 92

தலம் : திருவீழிமிழலை பண்: குறிஞ்சி
இறைவன் : வீழி அழகேசுவரர் இறைவி : சுந்தரகுசாம்பிகை

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே 1

இறைவர்ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே 2

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையிர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே 3

நீறுபூசினீர் ஏறதேறினீர்
கூறுமிழலையீர் பேறும் அருளுமே 4

காமன்வேவஓர் தூமக்கண்ணினீர்
நாம மிழலையீர் சேம நல்குமே. 5

பிணிகொள் சடையினீர் மணிகொள்மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே 6

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே 7

அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே 8

அயனு மாலுமாய் முயலு முடியினீர்
இயலு மிழலையீர் பயனும் அருளுமே 9

பறிகொள் தலையினார் அறிவதறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவதரியதே 10

Koviloor Digital Library

காழிமாநகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்

நாள் : **20–06–2010** ஞாயிறு மாலை 6.30 மணி


இடம் : அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை

பதிக இசை : திரு. **ஆ. ராமச்சந்திரன்** அவர்கள்

பதிக விளக்கம் : ஆன்மீகத் தென்றல், சேக்கிழார் விருது பெற்ற முனைவர் திரு. **K.B. முத்துச்சாமி** அவர்கள், ஸ்ரீவி.

விழாவினை ஏற்றுப்போற்றியோர் : **திருநாவுக்கரசர் நற்பணி மன்றம்** ஸ்ரீவில்லிபுத்தூர்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

7வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

ஞானசம்பந்தப் பெருமான் திருப்பயணத்தின்போது, கொங்கு நாட்டைச் சேர்ந்த செங்குன்றூருக்கு – திருச்செங்கோடு – அடியார் கூட்டத்தாருடன் எழுந்தருளியபோது பனிக்காலமாதலால் அங்குள்ள அனைவரும் குளிர் சுரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அடியார்களை அப்பேரிடலிருந்து காக்கும் பொருட்டு நீலகண்டப் பெருமானை பிரார்த்தித்து அருளிய பதிகம். பதிகம் பாடியவுடன் திருக்கூட்டத்தார் மட்டுமல்லாமல் அவ்வூரில் உள்ள அனைவரும் பிணி நீங்கினர்.

முதல் திருமுறை பதிகம் 116

தலம் : திருச்செங்கோடு பண்: வியாழக்குறிச்சி
இறைவன் : அர்த்தநாரீஸ்வரர் இறைவி : பாகம்பிரியாள்

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 1

காவினையிட்டுங் குளம்பலதொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போன்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 2

முலைத்தட மூழ்கிய போகங் களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 4

மற்றிணை யில்லா மலைதிரண்டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 5

Koviloor Digital Library

மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிருநீலகண்டம். 6

... . 7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துது நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 8

நாற்ற மலர்மிசை நான்முக னாரணன் வாது செய்து
தோற்ற முடைய வடியு முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுதுவணங்குது நாமடியோம்
சீற்றம் தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 9

சாக்கியப் பட்டுஞ் சமணுருவாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போன்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப் பெ றாதிரு நீலகண்டம். 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண்டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

நாள் : **18–07–2010** *ஞாயிறு* *மாலை 6.30 மணி*

இடம் : *அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை*

பதிக இசை : *திரு.* **ஆ. ராமச்சந்திரன்** *அவர்கள்*

பதிக விளக்கம் : *சிவநெறித் தொண்டர், தமிழ்ப்பணிச்செம்மல்*
திரு. **சி.மகாலிங்கம்,** M.A.,B.Ed., *அவர்கள்,*
திருவிடைமருதூர்.

விழாவினை ஏற்றுப்போற்றியோர் : **திரு. V.R.N. பாபு அவர்கள்**
ஸ்ரீவில்லிபுத்தூர்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

8வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

திருத்தருமபுரத்தில் இறைவனைப் பற்றிய அருட்பாக்களின் திறம் இசைக் கருவிகளுக்கு அடங்கிவிடாது என்றும், இசைக் கருவியினால்தான் பாடல் திறம் பெற்றது என்று கூறமுடியாது என்றும் யாழ்முரிப் பதிகமாக சம்பந்தரால் அருளப்பட்டது.

முதல் திருமுறை பதிகம் 136

தலம் : திருத்தருமபுரம் பண்: யாழ்மூரி
இறைவன் : யாழ்மூரிநாதர், தருமபுரீஸ்வரர்
இறைவி : மதுரமின்னம்மை, தேனமிர்தவல்லி

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும்மட வன்னமு மன்னதோர்
நடையுடைம் மலைமக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர் படர் சடைந்நெடு முடியதொர்புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே 1

பொங்குந டைப்புகலில் விடை யாமவ ரூர்திவெண்
பொடி யணி றடங் கொண்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புன லர வம்வைகிய சடையர்
சங்குக டற்றிரையாலுதை யுண்டுச ரிந்திரிந்
தொசித் தசைந் திசைந் துவே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழிற் றருமபு ரம்பதியே 2

விண்ணுறு மால்வரைபேல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொடோடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனாப்
பெண்ணுற நின்றவர் தம் முரு வம்மயன் மாறொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவன்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநற் றருமபு ரம்பதியே, 3

Koviloor Digital Library

வாருறு மென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தர்ருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழின் மழைந் நுழை தருமபு ரம்பதியே 4

நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடற் றடர்த் தபொற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர் நாகம ழஃகுறவ
வெழுஃ கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரம வர்க்கிமவான் மக ளூர்வது போர்விடை
கடி படு செடி பொழிற் றருமபு ரம்பதியே 5

கூழையங் கோதைகுலா யவ டம்பிணை புல்கமல்
குமென் முலைப்பொறி கொள்பொற் கொடியிடைத்துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃகறை யுறந்நறவ்விரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள்ளினந் துயில் பயி றருமபு ரம்பதியே. 6

தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந்துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையிற் றுதை வெண்மதி துன்றுகொன்
றைதொல்புனல் சிரஞ் கரந் துரித்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயற் றருமபு ரம்பதியே. 7

Koviloor Digital Library

தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முழையின் னத மும்முடை யாடையர்
கொலைம் மலி படை யொர்சூ லமந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் றருள்புரி தலைவர்
தாவண வேறுடையெம் மடி கட்கிடம் வன்றடங்
கடல் லிடுந்தடங் கரைத் தருமபு ரம்பதியே. 8

வார்மலி மென்முலைமா தொரு பாகமதாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலைதனிம் மாலை யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகெ டாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தர்வர் தங்கிடந்
தடங்கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே. 9

புத்தர்க டத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பய னாக வுகந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம்பொழிற் றருமபு ரம்பதியே. 10

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலீ
பொரூம் புன றிரூம் வமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம்ப பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மரவும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

நாள் : **22–08–2010** ஞாயிறு மாலை 6.40 மணி

இடம் : அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை


பதிக இசை : திருமதி. **ஜெய சுகந்தி மாரியப்பன்,** MA.B.Ed.
இராஜபாளையம் அவர்கள்

பதிக விளக்கம் : திரு. **P. மாரியப்பன்,** M.A.,B.Ed., அவர்கள்
இராஜபாளையம்.

விழாவினை ஏற்றுப்போற்றியோர் :

திரு. பொ. பொன்னாயிரசாமி அவர்கள்
பொறியாளர் (பணி நிறைவு), பொதுப்பணித் துறை
கீழப்பட்டித் தெரு, ஸ்ரீவி.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

9வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

திருமருகல் என்ற தலத்தில் அரவம் தீண்டி இறந்த வணிகனை பதிகம் பாடி உயிர் பெறச் செய்து, அவனை விரும்பி, அவனுடன் வந்த மாமன் மகளுக்கே திருமணம் செய்துவித்தார்.

இரண்டாம் திருமுறை
பதிகம் 18 தொடர் பதிகம் 154

தலம் : திருமருகல் பண்: இந்தளம்
இறைவன் : மாணிக்கவண்ணர், இரத்தினகிரீஸ்வரர்
இறைவி : வண்டுவார்குழலி, ஆமோதாளக நாயகி

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே. 1

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே. 2

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. 3

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
புலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணிநீ லவண்ணம் முகிறோன் றியன்ன
மணிநீ லகண்டம் முடையாய் மருகல்
கணிநீ லவண் டார்குழ லாளிவடன்
அணிநீ லவொண்கண் ணயர் வாக்கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்

Koviloor Digital Library

புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே. 6

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாணி னைவா ளிரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொண் மதில்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை யலராக் கினையே. 8

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர்வாக் கினையே. 9

அறிவியல் சமணும் மலர்சாக் கியரும்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. 10

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தன்பா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

நாள்	:	**19–09–2010** ஞாயிறு மாலை 6.30 மணி
இடம்	:	அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை
பதிக இசை	:	திருமதி. **ஜெயசுகந்தி மாரியப்பன்,** MA.B.Ed. இராஜபாளையம் அவர்கள்
பதிக விளக்கம்	:	சொல்லின் செல்வர், நல்லாசிரியர் திரு. **ந. செண்பகம்,** M.A.,B.Ed., அவர்கள் தலைவர், சேக்கிழார் மன்றம், இராஜபாளையம்.

விழாவினை ஏற்றுப்போற்றியோர் :

திரு. **ப. காளிமுத்து** அவர்கள் மற்றும் **குடும்பத்தினர்**
(நெடுஞ்சாலைத் துறை) காந்திநகர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

10வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

திருமறைக் காட்டில் (வேதாரணியம்) நீண்டகாலமாகப் பூட்டிக் கிடந்த கோவில் கதவை திருநாவுக்கரசரோடு சேர்ந்து பாடி திறக்கவும் வழிபாடு செய்தபின் மீண்டும் அடைக்கவும் பதிகம் பாடி அருளினார்.

2ம் திருமுறை பதிகம் 37 தொடர் பதிகம் 173

தலம் : திருமறைக்காடு பண்: இந்தளம்
இறைவன் : மறைக்காட்டு மணாளர், வேதாரண் யேசுவரர்
இறைவி : யாழைப்பழித்தமொழியாள்

திருச்சிற்றம்பலம்

சதுரம்மறை தான் துதி செய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ்மறைக் காட்டுரை மைந்தா
இது நன்கிறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவம்திருக் காப்புக்கொள்ளுங் கருத்தாலே. 1

சங்கம்தர ளம்அவை தான்கரைக்கு எற்றும்
வங்கக்கடல் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
மங்கைஉமை பாகமு மாகஇது என்கொல்
கங்கைசடை மேலடை வித்த கருத்தே. 2

குரவம்கருக் கத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
சிரமும் மல ருந்திகழ் செஞ்சடை தன்மேல்
அரவம்மதி யோடுஅடை வித்தல் அழகே. 3

படர்செம் பவளத்தொடு பன்மலர் முத்தம்
மடலம் பொழில்சூழ்மறைக் காட்டுறை மைந்தா
உடலம்உமை பங்கம தாகியும் என்கொல்
கடல்நஞ்சுஅமு தாவது உண்ட கருத்தே 4

வானோர்மறை மாதவத் தோர்வழி பட்ட
தேனார்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனோர்தொழு தேத்த இருந்தநீ என்கொல்
கான்ஆர்கடு வேடுவன்ஆன கருத்தே. 5

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய் மாமறைக் காடா

Koviloor Digital Library

உலகேழுடை யாய்கடை தோறுமுன் னென்கொல்
தலைசேர்பலி கொண்டதில் உண்டது தானே. 6

வேலாவல யத்தய லேமிளிர் வெய்தும்
சேலார்திரு மாமறைக் காட்டுறை செல்வா
மாலோடயன் இந்திரன் அஞ்சமுன் என்கொல்
காலார்சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே. 7

கலங்கொள்கடல் ஓதம் உலாவு கரைமேல்
வலங்கொள்பவர் வாழ்த்திசைக் கும்மறைக் காடா
இலங்கையுடை யான்அடர்ப் பட்டிடர் எய்த
அலங்கல்விரல் ஊன்றி அருள்செய்த வாறே. 8

கோனென்றுபல கோடி உருத்திரர் போற்றும்
தேனம்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனங்கழு கானவர் உன்னைமுன் என்கொல்
வானந் தல மண்டியும் கண்டிலா வாறே. 9

வேதம்பல வோமம் வியந்தடி போற்ற
ஓதம் உலவும்மறைக் காட்டில் உறைவாய்
ஏதில்சமண் சாக்கியர் வாக்கிவை என்கொல்
ஆதரொடு தாமலர் தூற்றிய வாறே. 10

காழிந்நக ரான்தலை ஞானசம் பந்தன்
வாழிம் மறைக் காடனை வாய்ந்தறி வித்த
ஏழின்னிசை மாலையீ ரைந்திவை வல்லார்
வாழியுல கோர்தொழ வானடை வாரே. 11

நாள் : **17–10–2010** ஞாயிறு *மாலை 6.30 மணி*

இடம் : *அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை*

பதிக இசை : திருமதி. **ஜெயசுகந்தி மாரியப்பன்,** MA.B.Ed.
இராஜபாளையம் அவர்கள்

பதிக விளக்கம் : திரு. **வீ. செந்தில்நாயகம்,** M.A. அவர்கள்
திருநெல்வேலி.

விழாவினை ஏற்றுப்போற்றினோர் : **அருட்செல்வர்**
ஸ்ரீ மாணிக்கவாசகர் பேரவை
அமாவாசைக் கமிட்டி, ஸ்ரீவி.

Koviloor Digital Library

11வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

திருமைலாப்பூரில் பெருவணிகனான சிவனேசரின் இறந்து போன மகளின் எலும்பும், சாம்பலும் கொண்ட குடத்தை உருவித்து பதிகம் பாடி பூம்பாவையாக உயிர் பெறச் செய்தார்.

2ம் திருமுறை பதிகம் 47 தொடர் பதிகம் 183

தலம் : மயிலாப்பூர் பண்: சீகாமரம்
இறைவன் : கபாலீஸ்வரர் இறைவி : கற்பகவல்லி

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானல் மட மயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய் 2

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச்சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத்தேந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர்திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண் புழுக்கல் நேரிழையோர் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆன் ஏறு ஊறும் அடிகள் அடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். 6

Koviloor Digital Library

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல் செய் பங்குனி உத்திர நாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண்ணா அரக்கன் தோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள் தம் அட்டமி நாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய். 8

நற்றாமரை மலர் மேல் நான்முகனும் நாரணனும்
உற்றாங்கு உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்கள் எடுத்து உரைப்ப நாட்டில்
கருஞ் சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய் 10

கானமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வல்லார்
வான சம்பந்தத்து அவரோடும் வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

நாள் : **28–11–2010** ஞாயிறு மாலை 6.45 மணி
இடம் : அ.மி. வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை
பதிக இசை : திருமதி. **ஜெயசுகந்தி மாரியப்பன்,** MA.B.Ed.
இராஜபாளையம் அவர்கள்
பதிக விளக்கம் : முனைவர். **பனசை. மூர்த்தி,** M.A.Ph.D., அவர்கள்
பதிப்பாசிரியர், அரனருள் சைவசமய திங்களிதழ், சென்னை
விழாவினை ஏற்றுப்போற்றியோர் :
திரு. **V.R.S. செந்தில் கண்ணன்** அவர்கள்
V.R.S. சங்கர் ரைஸ் மில், ஸ்ரீவி.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

12வது பன்னிரு திருமுறை பதிக விளக்க விழா

சமணனாக மாறியிருந்த மதுரை மன்னன் நின்றசீர் நெடுமாறப் பாண்டியனைப் பற்றியிருந்த வெப்பு நோயை இந்த திருநீற்றுப் பதிகம் பாடி திருநீறு பூசி நோயைக் குணப்படுத்தி சைவனாக மாற்றி அருளினார்.

2ம் திருமுறை பதிகம் 66 தொடர் பதிகம் 202

தலம் : மதுரை (திரு ஆலவாய்) பண்: காந்தாரம்
இறைவன் : சொக்கநாதர், சுந்தரேசப் பெருமான்
இறைவி : மீனாட்சி அம்மை

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ள நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே. 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவர்அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே. 5

அருத்தமதாவது நீறு அவலம அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு

A. No. 14095

Koviloor Digital Library

பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அரா வணங்கும் திருமேனி ஆலவாயன் திருநீறே. 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

நாள் : **19–12–2010** ஞாயிறு மாலை 6.45 மணி

இடம் : அ.மி. வைத்தியநாத சுவாமி திருக்கோயில் சித்திரசபை

பதிக இசையும் : திருவருட்செல்வர். **P. கோவிந்தராஜ்** அவர்கள்
விளக்கமும் இராஜபாளையம்

விழாவினை ஏற்றுப்போற்றியோர் :

திரு. **P.R. ஸ்ரீ ரெங்கராஜா,** அவர்கள்
தமிழ்நாடு ஷா மில், சாத்தூர் ரோடு, ஸ்ரீவி.
தாளாளர், அரிமா மேநிலைப் பள்ளி, ஸ்ரீவி.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

குருவருள் திருமுறை மன்றம்

மடவார் வளாகம், ஸ்ரீவில்லிபுத்தூர்.



பிரதி மூன்றாவது வாரம் ஞாயிற்றுக் கிழமை
மாலை 6.00 மணியளவில், மடவார் வளாகம்,
அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோவில் சித்திர சபையில்

பன்னிரு திருமுறை பதிக விளக்கவுரை

நடைபெறுகிறது. அவ்வமயம் ஆன்மீக அன்பர்கள் கலந்து கொண்டு
இறையருள் பெற வேண்டுகிறோம்.

நாராயணா கம்ப்யூட்டர் பிரஸ், ஸ்ரீவி., போன் : 261772